# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

**சு. முத்துசாமி**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 – 2 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 2 – 26 |
| 3. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 26 – 41 |
| 4. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு – குற்றப் புலனாய்வுத் துறை | 42 – 52 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 52 – 72 |
| 6. | நிறைவுரை | 72 – 74 |

**உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**மானியக் கோரிக்கை எண்.37**

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2024-2025**

## 1. முன்னுரை

சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை கள்ளச் சாராயத்தின் தீமைகளிலிருந்து பாதுகாத்து, அவர்களின் சுகாதார மற்றும் சமூகப் பொருளாதார நிலை மேம்படுவதை உறுதி செய்யும் வகையில் நடைமுறைக்கேற்றவாறு மதுபானக் கொள்கையை தமிழ்நாடு அரசு செயல்படுத்துகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. உள் துறையின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவின்கீழ், கீழ்க்காணும் மூன்று துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் ஒரு மாநில பொதுத்துறை நிறுவனம் செயல்படுகின்றன:-

1. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்;
2. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு;
3. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு – குற்றப் புலனாய்வுத் துறை; மற்றும்
4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC).

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X / 1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகள் செயல்படுத்தப்படுவதை, பின்வரும் முதன்மையான குறிக்கோள்களின் அடிப்படையில் மேற்பார்வையிடுகிறார்:–

- மேம்படுத்தப்பட்ட ஆயத்தீர்வை நிர்வாகத்தின் மூலம் மதுபான உற்பத்தியைக் கண்காணித்தல்.

- கள்ளச்சாராயம் காய்ச்சுவது மற்றும் விற்பனை செய்வதை ஒழித்தல்.
- மதுப் பழக்கத்தின் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- போலி மற்றும் வரி செலுத்தப்படாத மதுபானங்கள் மாநில எல்லை தாண்டி கடத்தப்படுவதைத் தடுத்தல்.

2.2 மாநில அளவில், இரு இணை ஆணையர்களும் (மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில்), ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் (அரசு இணைச் செயலாளர் (நிதித்துறை) நிலையில்) மற்றும் 5 உதவி ஆணையர்களும் (துணை ஆட்சியர் நிலையில்) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவிபுரிந்து வருகின்றனர். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்களுக்கு துணை / உதவி ஆணையர்கள் (கலால்) உதவிபுரிந்து வருகின்றனர். இக்குழுவின் முதன்மை பொறுப்பு இச்சட்டத்தின்

கீழ்வரும் விதிகள் மற்றும் விதிமுறைகள் உட்பட கொள்கைகளை செயல்படுத்துவதாகும்.

**2.3** இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் போன்ற சாராவி உற்பத்தியினைக் கண்காணிப்பதை உறுதி செய்திடவும், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937–இன்கீழ் ஆயத்தீர்வைப் பொருட்களுக்கு ஆயத்தீர்வை வசூலிக்கப்படுவதைக் கண்காணிக்கவும், உற்பத்தி நிறுவனங்கள், இரசாயன ஆலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும் மற்றும் பிணைமுறி அலுவலர்களாகவும் இப்பணிகளை கவனிக்கும் பொருட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)**

2.4 சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாகக் கிடைக்கும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவி உற்பத்தி செய்ய முதன்மை மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டை நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர / காலாண்டு / ஆண்டு இருப்பு அளவில், இருப்பு வைத்து பயன்படுத்த உரிமதாரர்கள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரால் அனுமதிக்கப்படுகிறார்கள். கருப்பஞ்சாற்றுக் கசண்டை இருப்பு வைத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான உரிமம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையரின் முன் அனுமதியுடன் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலரால் வழங்கப்படுகிறது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி உற்பத்தி**

2.5 மது உற்பத்தி செய்ய தேவைப்படும் மூலப் பொருளான சாராவி தயாரிப்பில் வடிப்பாலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில்,

2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும், 14 வடிப்பாலைகள் தனியார் துறையிலும், ஆக மொத்தம் 16 வடிப்பாலைகள் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | வடிப்பாலைகளின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| **கூட்டுறவுத் துறை ஆலைகள்** | |
| 1. | தி/ள். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,<br>கிருஷ்ணாபுரம், மடத்துக்குளம் வட்டம்,<br>திருப்பூர் மாவட்டம். |
| 2. | தி/ள். சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,<br>மோகனூர், நாமக்கல் மாவட்டம். |
| **தனியார் துறை ஆலைகள்** | |
| 3. | தி/ள். ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட்,<br>காணாதுகண்டான், விருதாச்சலம்,<br>கடலூர் மாவட்டம். |
| 4. | தி/ள். இ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட்,<br>நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம். |
| 5. | தி/ள். இ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட்,<br>உடைக்குளம், சிவகங்கை மாவட்டம். |

| | |
|---|---|
| 6. | திரு. தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>கலியநல்லூர், கள்ளக்குறிச்சி மாவட்டம். |
| 7. | திரு. சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,<br>முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம். |
| 8. | திரு. ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>செம்மேடு, விழுப்புரம் மாவட்டம். |
| 9. | திரு. பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>டி. புதூர், இராணிப்பேட்டை மாவட்டம். |
| 10. | திரு. பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட்,<br>சின்னபுலியூர், ஈரோடு மாவட்டம். |
| 11. | திரு. சக்தி சுகர்ஸ் லிமிடெட்,<br>ஆப்பக்கூடல், ஈரோடு மாவட்டம். |
| 12. | திரு. திருஆரூரான் சுகர்ஸ் லிமிடெட்,<br>திருமண்டங்குடி, தஞ்சாவூர் மாவட்டம். |
| 13. | திரு. கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>காட்டூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 14. | திரு. தனலட்சுமி ஸ்ரீநிவாசன் சுகர்ஸ் (பி) லிமிடெட்,<br>உடும்பியம் கிராமம், பெரம்பலூர் மாவட்டம். |

| | |
|---|---|
| 15. | திரு. ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>வரதராஜ நகர், குள்ளபுரம் கிராமம், தேனி மாவட்டம். |
| 16. | திரு. தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>வாசுதேவநல்லூர், தென்காசி மாவட்டம். |

**தெளிந்த சாராவி (ENA)**

**2.6** இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் உற்பத்தி செய்ய தெளிந்த சாராவி பயன்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் தெளிந்த சாராவி உற்பத்தி செய்யும் 16 வடிப்பாலைகள் உள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் 13.17 கோடி லிட்டர் தெளிந்த சாராவி 16 வடிப்பாலைகளில் தயாரிக்கப்பட்டது. 2023–24 ஆம் ஆண்டில் 4.89 கோடி லிட்டர் தெளிந்த சாராவி பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி (GENA)**

**2.7** இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் உயர்தர மதுபான வகைகளைத் தயாரிக்க, தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி தேவைப்படுகிறது. இம்மாநிலத்தில் தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆகவே, இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவியை பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் 7.87 கோடி லிட்டர் தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வருவாயைப் பெருக்கவும் தானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாராவி உற்பத்தி நிறுவனங்கள் அமைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**எத்தனால் (Ethanol)**

**2.8** எத்தனால் ஓர் உயிரி எரிபொருள் (Bio–fuel) என்பதாலும் மற்றும் மாசற்ற தன்மையுடையதாலும் பெட்ரோலுடன் எளிதாக கலக்கக்கூடியது. இந்திய அரசின் தேசிய உயிரி எரிபொருள் செயல்முறை திட்டத்தின் கீழ் எத்தனால் பெட்ரோலுடன் கலக்கும் திட்டம் மாநிலங்களில் ஊக்குவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 12 வடிப்பாலைகளில் எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது. 2023–24 ஆம் ஆண்டில், 12 வடிப்பாலைகளில், 8 வடிப்பாலைகள் 1.66 கோடி லிட்டர் எத்தனாலை உற்பத்தி செய்துள்ளன.

**இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

**2.9** தற்பொழுது, தமிழ்நாட்டில் 11 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 8 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின்

தயாரிக்கும் நிறுவனம் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| **இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள்** | |
| 1. | திரு. என்ரிகா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம், சென்னை – 600 056. |
| 2. | திரு. டிரான்ஸ்வேர்ல்டு புரூவரிஸ் (ம) டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், 7, செல்வா தெரு, எம்.எம்.நகர், வளசரவாக்கம், சென்னை – 600 087. |
| 3. | திரு. எம்பீ டிஸ்டில்லரீஸ் லிமிடெட், மேவலூர்குப்பம் கிராமம், தண்டலம் அஞ்சல், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் – 602 105. |
| 4. | திரு. மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் பிரைவேட் லிமிடெட், 2/207, படப்பை அஞ்சல், புஷ்பகிரி ரோடு, சிறுமத்தூர்– படப்பை, குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் – 601 301. |

| | |
|---|---|
| 5. | தி/ள். அக்கார்ட் டிஸ்டில்லர்ஸ் மற்றும் புரூவர்ஸ் பிரைவேட் லிமிடெட், நத்தநல்லூர், வாலாஜாபாத் தாலுக்கா, காஞ்சிபுரம் –631 605. |
| 6. | தி/ள்.எஸ்.என்.ஜெ. டிஸ்டில்லர்ஸ் பிரைவேட் லிமிடெட், 56/1, கள்ளபிரான்புரம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு – 603 308. |
| 7. | தி/ள்.சதர்ன் அக்ரிபுரேன் இண்ட்ஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட், எல்லிச்சத்திரம் ரோடு, வழுதா ரெட்டி, விழுப்புரம் – 605 602. |
| 8. | தி/ள். சிவா டிஸ்டில்லரீஸ் பிரைவேட் லிமிடெட், 45, மேட்டுப்பாளையம் ரோடு, நரசிம்மநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர் – 641 031. |
| 9. | தி/ள்.கால்ஸ் பிவரேஜஸ் பிரைவேட் லிமிடெட், மாவுதம்பதி கிராமம், நாவக்கரை அஞ்சல், கோயம்புத்தூர் – 641 105. |
| 10. | தி/ள்.கால்ஸ் டிஸ்டில்லரீஸ் பிரைவேட் லிமிடெட், கள்ளக்கோட்டை கிராமம், கந்தர்வகோட்டை வட்டம், புதுக்கோட்டை – 622 302. |

| | |
|---|---|
| 11. | தி/ள்.கோல்டன் வாட்ஸ் பிரைவேட் லிமிடெட்,<br>கர்ணாவூர் கிராமம், மன்னார்குடி வட்டம்,<br>திருவாரூர் – 614 014. |
| **பீர் உற்பத்தி நிறுவனங்கள்** | |
| 1. | தி/ள். டிரான்ஸ்வேர்ல்டு புரூவரிஸ் (ம) டிஸ்டில்லரீஸ் லிமிடெட் (புரூவரீ),<br>7, செல்வா தெரு, எம்.எம்.நகர்,<br>வளசரவாக்கம்,<br>சென்னை – 600 087. |
| 2. | தி/ள். அக்கார்ட் டிஸ்டில்லர்ஸ் மற்றும் புரூவர்ஸ் பிரைவேட் லிமிடெட்,<br>இளையனார்வேலூர் கிராமம்,<br>வாலாஜாபாத் வட்டம்,<br>காஞ்சிபுரம் – 631 603. |
| 3. | தி/ள். எஸ்.என்.ஜெ. புரூவரீஸ் பிரைவேட் லிமிடெட்,<br>மூசிவாக்கம்–கோலம்பாக்கம் கிராமம்,<br>மதுராந்தகம் வட்டம்,<br>செங்கல்பட்டு – 603 308. |
| 4. | தி/ள். யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட்,<br>அரண்வாயில் கிராமம், எம்.ட்டி.எச். ரோடு,<br>திருவள்ளூர் – 602 025. |
| 5. | தி/ள். யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட்,<br>788/2, குத்தம்பாக்கம் கிராமம்,<br>திருமழிசை அஞ்சல்,<br>திருவள்ளூர் – 600 124. |

| | |
|---|---|
| 6. | தி/ள். அப்போல்லோ டிஸ்டில்லரீஸ் (ம) புரூவரிஸ் பிரைவேட் லிமிடெட், பில்லாகுப்பம் கிராமம், சிறுபுழல்பேட்டை, திருவள்ளூர் – 602 025. |
| 7. | தி/ள். டிராப்பிகல் புரூவரீஸ் பிரைவேட் லிமிடெட், தேர்வாய்க்கண்டிகை கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் – 601 202. |
| 8. | தி/ள். கால்ஸ் புரூவரீஸ் பிரைவேட் லிமிடெட், குன்னத்தூர் கிராமம், விராலிமலை வட்டம், புதுக்கோட்டை – 621 316. |
| **ஒயின் உற்பத்தி நிறுவனம்** | |
| 1. | தி/ள். கம்பம் வேலி ஒயினரி பிரைவேட் லிமிடெட், சின்ன ஓவலாபுரம் கிராமம், உத்தமபாளையம் வட்டம், தேனி – 625 516. |

**பீர் ஏற்றுமதி**

**2.10** வெளி மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. 2023–2024 ஆம் ஆண்டில், 3,20,024 பெட்டிகள்

(cases) பீர் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.187.79 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. வெளி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி நிகழ்நிலையில் (Online) வழங்கப்படுகிறது.

**அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி**

**2.11** தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981–இன்படி, அயல்நாட்டு மதுபான வகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி வழங்கப்படுகிறது. எப்.எல்.2 (மனமகிழ் மன்றங்கள்) மற்றும் எப்.எல்.3 (மூன்று நட்சத்திர மற்றும் அதற்கும் குறைவான நட்சத்திர தரமுள்ள தங்கும் இடத்துடன் கூடிய மதுபானக் கூடங்கள் மற்றும் நட்சத்திர தரம் இல்லாத தங்கும் இடத்துடன் கூடிய மதுபானக் கூடங்கள்) உரிமதாரர்கள், அயல்நாட்டு மதுபானங்களை

இறக்குமதி செய்வதை எளிதாக்கும் வகையில், மார்ச்–2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பற்றாளர் முகமையாக (Nodal Agency) நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் சேவைக் கட்டணமாக, சிறப்புக் கட்டணத் தொகையில் 3 விழுக்காடு தொகை வசூலிக்கிறது.

**2.12** பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்கள் விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வை பிணைமுறி கிடங்குகளில் (Excise Bonded Warehouses) இருந்து அயல்நாட்டு மதுபானங்களை எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திரம், ஐந்து நட்சத்திரம் மற்றும் அவற்றிற்கு அதிகமான நட்சத்திர தரமுள்ள தங்கும் இடத்துடன் கூடிய மதுபானக் கூடங்கள்) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மூலமாக கொள்முதல் செய்து கொள்ளலாம்.

**2.13** 2023–24 நிதியாண்டில், அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்வதற்கான சிறப்புக்

கட்டணம் மூலம் அரசுக்கு ரூ.53.93 கோடியும், சேவைக் கட்டணம் மூலம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.16.70 இலட்சமும் வருவாய் கிடைத்துள்ளது.

**நீரா**

**2.14** தென்னை மரத்தின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு எதிர்ப்பு தொழில்நுட்பத்தினைப் (Anti Fermentation Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஒரு ஊட்டச்சத்து பானம் தான் நீரா. தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும் மற்றும் நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிப்பதற்கும், உரிமம் வழங்கும் அலுவலராக மாவட்ட ஆட்சியரை அரசு நியமித்துள்ளது.

**2.15** நிறுவனங்கள் சட்டம், 2013–இன்கீழ் (Companies Act, 2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டம், 1983–இன்கீழ் பதிவு

செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள், நீராவை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெற தகுதி பெற்றவை ஆகும். தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் தென்னை வளர்ச்சி வாரியத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

**மாநில ஆயவில்லைகள்**

**2.16** போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலை தடுக்கவும், மதுபான தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்கு செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதி செய்யவும், காகித ஆயவில்லைகளுக்கு பதிலாக நகலெடுக்க முடியாத செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகளை (Polyester based Hologram) ஒட்டும் நடைமுறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வில்லைகளின் செயல் திறனை அதிகரிப்பதற்கு பாதுகாப்பு அம்சங்கள் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது மாதமொன்றுக்கு சராசரியாக தோராயமாக தேவைப்படும் ஆயவில்லைகளின் எண்ணிக்கை 27.55 கோடி ஆகும். 2023-24 ஆம் ஆண்டில், ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசுக்கு ரூ.25.03 கோடி நிகர வருவாய் கிடைத்துள்ளது.

**நிகழ்நிலை இணையதளம் (Online web based) வாயிலாக உரிமம் கோரும் விண்ணப்பங்கள், உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தலுக்கான செயலிகள்**

**2.17** வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக 2018-19 ஆம் ஆண்டு முதல் நிகழ்நிலை இணையதள அமைப்பு (Online web based) வாயிலாக உரிமம் கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் புதுப்பித்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இணையதள

செயலிகள் மூலமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அனுமதி, உரிமம் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான கால அவகாசமானது கணிசமாகக் குறைந்துள்ளது.

தற்போது நிகழ்நிலையில் (Online) வழங்கப்படும் சேவைகளில் பின்வருவன அடங்கும்:

1. எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்களுக்கு அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ய இறக்குமதி அனுமதி வழங்குதல்.
2. பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதி அனுமதி வழங்குதல்.
3. எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

**2.18** மின் ஆளுமை நடவடிக்கைகளின் கீழ் 74 சேவைகளை "e-Kalaal" எனும் இணையதள செயலி மூலம் வழங்குவதற்கு 2022-23 ஆம் ஆண்டில் அரசு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு

செய்துள்ளது. இந்த 74 சேவைகளும் "e–Kalaal" இணையதள செயலி வாயிலாக ஜுலை, 2024 ஆம் மாதத்தில் முழுமையாக தொடங்கப்படும். இந்த "e–Kalaal" இணையதள செயலி மூலம் உரிமதாரர்கள் உரிமம் பெறுவதற்கான செயல்பாடுகள் நெறிப்படுத்தப்படுவதோடு வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்பட்டு நிர்வாக நடைமுறைகள் விரைவுபடுத்தப்படும்.

**மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

2.19 மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் பொருட்டு, மறுவாழ்வு நிதி ஒன்றினை 2002 ஆம் ஆண்டு முதல் அரசு துவங்கியுள்ளது. முதலில் கடனாக வழங்கப்பட்டு வந்த இந்த மறுவாழ்வு நிதியானது, பின்னர் 2011 ஆம் ஆண்டு முதல் மானியமாக மாற்றப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**2.20** ஒவ்வொரு மாவட்டத்திலும், மறுவாழ்வுக் குழு அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் தலைவராகவும் கீழ்க்கண்ட அலுவலர்கள் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்:–

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
2. முதுநிலை மண்டல மேலாளர்
(தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்)
3. துணை ஆணையர் /
உதவி ஆணையர் (கலால்)

இக்குழு தகுதிவாய்ந்த பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு மானியம் வழங்குகிறது. பயனாளிகள் நிரந்தர வருவாய் ஈட்டும் பொருட்டு, ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் தயாரித்தல் போன்ற சிறு தொழில் செய்வதற்காக பயனாளி ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.30,000/– மானியமாக வழங்கப்பட்டது.

**2.21** 2023–24 ஆம் ஆண்டில் பயனாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட மறுவாழ்வு உதவித் தொகை ரூ.30,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 496 மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு வழங்க ரூ.2.50 கோடி மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

**மதுப் பழக்கத்திற்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளுதல்**

**2.22** மதுப் பழக்கம், கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து மாவட்டங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்வதற்கு அரசு ரூ.4.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வதற்காக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு இந்நிதியானது பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்களை

உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:–

1. காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்), சென்னை மற்றும் மதுரை மண்டலம்

2. மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

3. முதன்மை கல்வி அலுவலர்

4. துணை ஆணையர் / உதவி ஆணையர் (கலால்)

5. மக்கள் தொடர்பு அலுவலர்

**2.23** மாவட்டத்தின் பல்வேறு இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள், சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**2.24** மேலும், மதுப் பழக்கம், கள்ளச்சாராயம், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாவட்ட அளவில்

பொதுமக்களை ஒருங்கிணைத்து, கலை நிகழ்ச்சிகள், கவிதை எழுதுதல், கதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன.

2.25 விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.4.00 கோடி நிதியில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.9,46,600/–ம், சென்னை கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) அவர்களுக்கு ரூ.15.00 இலட்சமும் மற்றும் சென்னை மற்றும் மதுரை மண்டலங்களில் உள்ள காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) அவர்களுக்கு தலா ரூ.10.00 இலட்சமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2023–24 ஆம் ஆண்டில், 2,310 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, 3,61,500 நபர்கள் பங்கேற்றனர்.

**போதை மீட்பு மையங்கள்**

2.26 மதுப் பழக்கம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு, ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்காக மாநிலம் முழுவதும்

20 போதை மீட்பு மையங்களை அரசு நிறுவியுள்ளது. இம்மையங்கள், போதைப் பழக்கத்திற்கு அடிமையான தனிநபர்கள் அப்பழக்கத்திலிருந்து விடுபடவும், ஆரோக்கியமாக வாழ்ந்திடவும் உதவுகிறது.

## 3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

**3.1** கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழித்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதைத் தடுத்தல் ஆகியவற்றை முதன்மை குறிக்கோளாகக் கொண்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

**3.2** காவல்துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக ஒரு காவல்துறை தலைவர் மற்றும் 3 காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

காவல் கண்காணிப்பாளர், மத்திய நுண்ணறிவுப் பிரிவு அவர்களுக்கு உதவியாக இரண்டு துணை காவல் கண்காணிப்பாளர்கள், 6 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் பிற காவல் ஆளிநர்கள் உள்ளனர். சென்னை மற்றும் மதுரையில், மண்டல அமலாக்க காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

**3.3** மாநிலத்தில் 101 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்குகின்றன. இந்தப் பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937–ஐ அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் அனைத்தும், மாவட்டங்களில், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரங்களில் உதவி ஆணையர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 மாவட்டங்களில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மாவட்டங்களில் மாவட்ட காவல்

கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழும், மாநகரங்களில் காவல் ஆணையர்களின் கட்டுப்பாட்டின் கீழும் பணியாற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலர்கள் மதுவிலக்குச் சட்டத்தினை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடையவர்கள் ஆவர்.

**3.4 அண்டை மாநிலங்களிருந்து போலி மதுபானம் மற்றும் எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

**(அ) சிறப்புக் குழுக்கள்**

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் ஆய்வு (CDR Analysis) ஆகியவற்றின் மூலம், எரிசாராயக் கடத்தல், போலி மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிருந்து மதுபானக் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளைப் பிடிப்பதற்காக சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) **மதுவிலக்கு சோதனைச் சாவடிகள்**

போலி மதுபான கடத்தலைத் தடுப்பதற்காக மாநிலம் முழுவதும் மொத்தம் 45 நிரந்தர மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:–

| **வ. எண்** | **மாவட்டத்தின் பெயர்** | **சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | 9 |
| 2. | கிருஷ்ணகிரி | 7 |
| 3. | நாகப்பட்டினம் | 5 |
| 4. | திருவள்ளூர் | 5 |
| 5. | வேலூர் | 5 |
| 6. | கடலூர் | 4 |
| 7. | சேலம் | 2 |
| 8. | கன்னியாகுமரி | 1 |
| 9. | தேனி | 1 |
| 10. | ஈரோடு | 1 |
| 11. | நீலகிரி | 1 |
| 12. | திருப்பூர் | 1 |
| 13. | திருவாரூர் | 1 |
| 14. | கோயம்புத்தூர் | 1 |
| 15. | சென்னை மாநகரம் | 1 |
| | **மொத்தம்** | **45** |

இவை தவிர, 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் பின்வரும் மாவட்டங்களில் இயங்கி வருகின்றன:–

| **வ. எண்.** | **மாவட்டத்தின் பெயர்** | **சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 2 |
| 2. | கடலூர் | 1 |
| 3. | விழுப்புரம் | 1 |
| 4. | கிருஷ்ணகிரி | 1 |
| 5. | திருவள்ளூர் | 1 |
| 6. | திருவாரூர் | 1 |
| | **மொத்தம்** | **7** |

மேலும், திருவிழாக்கள் மற்றும் மது விற்பனை தடை செய்யப்பட்ட தினங்களில் (Dry Days), தற்காலிக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அண்டை மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத / போலி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் / எரிசாராயம் மற்றும் சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்கப்படுகிறது.

**(இ) தெளிந்த சாராவிக்கு எதிரான நடவடிக்கை**

தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த எரிசாராயம் (ethyl alcohol) ஆகும். இது பொதுவாக விலை குறைந்த மதுபானமாக விற்பதற்காகக் கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில், இத்தகைய தெளிந்த சாராவியை அருந்துவதால் உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. தெளிந்த சாராவியின் கடத்தலைக் கண்டறிவதற்காக மத்திய நுண்ணறிவுப் பிரிவால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனத் தணிக்கைகள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. 2023–24 ஆம் ஆண்டில் 30 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 18 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**(ஈ) கள்ளச்சாராயத்திற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை விவரம்**

கள்ளச்சாராயம் காய்ச்சுதலைத் தடுக்க, மாவட்ட காவல் துறையுடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

மற்றும் வருவாய் துறையினரால் அடிக்கடி சிறப்பு சோதனைகள் நடத்தப்படுகின்றன. 2023-24 ஆம் ஆண்டில் 12,431 வழக்குகள் பதியப்பட்டு, 12,422 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதுடன் 4,64,152 லிட்டர் கள்ளச்சாராயம் அழிக்கப்பட்டது.

**மாநிலங்களின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளில் மின்கலத்துடன் கூடிய சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளைப் பொருத்துதல்**

**3.5** 2022-23 ஆம் ஆண்டில், அண்டை மாநிலங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள 20 சோதனைச் சாவடிகளில், மின்கலத்துடன் கூடிய சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகள் ரூ.7.11 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA) மூலம் பொருத்த அரசு ஆணையிட்டுள்ளது.

**இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

**3.6** எரிசாராயம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு இரகசிய தகவல்கள் தருபவர்களுக்கு பண வெகுமதி வழங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.15.00 இலட்சம் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது. இந்த வெகுமதிக்கான தொகையை 2023-24 ஆம் ஆண்டு முதல் ரூ.15.00 இலட்சத்திலிருந்து, ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**ஊக்க வெகுமதி**

**3.7** எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்படும் மதுபானப் புட்டிகள் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்குப் பிரிவு, சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும்

பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ரூ.15.00 இலட்சம் ஊக்கத் தொகை அரசால் வழங்கப்படுகிறது. 2023-24 ஆம் ஆண்டு முதல் இந்த ஊக்கத் தொகையினை ரூ.15.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. காவல் ஆளிநர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை இந்த ஊக்க வெகுமதிகள் பெறத் தகுதியானவர்கள் ஆவர்.

**கள்ளச்சாராயம், போதைப் பொருட்கள் மற்றும் மெத்தனாலினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

**3.8** கள்ளச்சாராயம், மதுப் பழக்கம் மற்றும் போதைப் பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, 2023-24 ஆம் ஆண்டில் அரசால், ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு ரூ.35.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மது அருந்துவதால் ஏற்படும்

தீமைகள் குறித்து குழு விவாதங்கள், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் மூலம் பள்ளி / கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**3.9** இதைத் தவிர, விழிப்புணர்வு வாசகங்கள் இடம் பெற்ற டி–ஷர்ட்கள், பயணப்பைகள் மற்றும் நாட்காட்டிகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மதுப் பழக்கம் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் சமூக வலைதளங்களில் பொதுமக்களுக்கு பகிரப்பட்டன. விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெற்ற ஒட்டிகள் (Stickers) போக்குவரத்துத் துறைக்கு வழங்கப்பட்டு, அவைகள் பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன.

**3.10** 2023–24 ஆம் ஆண்டில் 5,928 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 5,88,304

மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**மதுவிலக்கு உதவி எண் – 10581**

**3.11** கட்டணமில்லா உதவி எண். **'10581'** ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு, அது மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமையகத்தில் உள்ள தலைமை கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த கட்டணமில்லா உதவி எண் 24 x 7 மத்திய நுண்ணறிவுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம், போலி மதுபானம் கடத்துதல், கள்ளச்சாராய விற்பனை ஆகிய மதுவிலக்கு குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் தகவல் மற்றும் புகார்கள் அளிப்பதற்கு **"94984 10581"** என்ற வாட்ஸ்அப் எண்ணும் வழங்கப்பட்டுள்ளது. 01.04.2023 முதல் 31.03.2024 வரை 2,797 புகார்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களை தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

3.12 ஒரு சில மாவட்டங்களில் மெத்தனால் உட்கொண்டதால் சிலர் உயிரிழந்தனர் என்ற தகவல் பெற்றவுடன் காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் மேற்கொண்ட துரித நடவடிக்கையால், சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டனர். மேலும் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தற்போது வழக்குகள் சி.பி.சி.ஐ.டி–க்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

3.13 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக 'மெத்தனால்' பயன்பாட்டால் உயிரிழப்புகள் 2002–இல் நிகழ்ந்ததால், அதனை தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937–இன் கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்திட, 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி

மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் 1959–க்கு உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

**3.14** மெத்தனால் தயாரிக்கும் அனைத்து தொழிற்சாலைகள், அப்பொருளை பயன்படுத்தும் இறுதி பயனாளர்கள் மற்றும் மெத்தனால் வைத்திருக்க உரிமம் பெற்ற ஆலைகள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மெத்தனால் உரிமம் வைத்திருக்கும் அனைத்து அலகுகளையும் கண்காணிக்கவும், அடிக்கடி ஆய்வு செய்யவும், விதிமீறல்கள் அல்லது முறைகேடுகளை சரிபார்க்கவும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 3.15 2023–2024 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

- மாநிலத்தில் கள்ளச்சாராயம், போலி மதுபானங்கள், பிற மாநில மதுபானங்கள் ஆகியவற்றை ஒழித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது.

- மொத்தம் 1,61,241 மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,60,013 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றவாளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருள்களின் விவரம் மற்றும் மதிப்பு பின்வருமாறு:–

| வ. எண் | கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருள்களின் பெயர்கள் | கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் (லிட்டர்) | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | **இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானங்கள்** | 2,92,410 | 19,64,99,520 |
| 2. | **சாராய ஊறல்** | 8,72,836 | 1,74,56,720 |
| 3. | **கள்ளச்சாராயம்** | 4,64,152 | 1,85,66,080 |
| 4. | **எரிசாராயம்** | 22,018 | 22,01,800 |
| 5. | **கள்** | 46,279 | 9,25,580 |
| | | **மொத்தம்** | 23,56,49,700 |

- 4 லாரிகள், 7 வேன்கள், 230 கார்கள், 49 ஆட்டோக்கள், 15 படகுகள் மற்றும் 3,135 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 3,440 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
- மதுவிலக்கு குற்றங்களில் தொடர்புள்ள 120 கொடுங்குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் XIV / 1982–இன் (B.L. Act) கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

**3.16** மதுவிலக்குக் குற்றங்களை ஒழிப்பதில் சிறப்பாகப் பணிபுரிந்த 1 காவல் கண்காணிப்பாளர், 1 காவல் துணை கண்காணிப்பாளர், 1 காவல் ஆய்வாளர், 1 காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 1 தலைமைக் காவலர் ஆகியோருக்கு 2023 ஆம் ஆண்டிற்கான "காந்தியடிகள் காவலர் பதக்கம்" வழங்கப்பட்டுள்ளது.

காந்தியடிகள் காவலர் பதக்கம் மற்றும் அதற்கான பண வெகுமதி ரூ.40,000/- ஆகியவை, மேற்கண்ட காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநருக்கு 26 ஜனவரி 2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு – குற்றப் புலனாய்வுத் துறை

**4.1** காவல் துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் தலைமையிலான போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையானது உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கீழ் செயல்படுகிறது. அவருக்கு உதவியாக காவல் துறை தலைவர் (குற்றம்), காவல் துறை கண்காணிப்பாளர், கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் 118 காவல் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

### 4.2 2023-24 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

**சட்ட அமலாக்க நடவடிக்கைகள்**

- தமிழ்நாடு காவல் துறை எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில்

கஞ்சா பயிரிடுவது முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளது.

- மொத்தம் 10,213 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கஞ்சா மற்றும் பிற போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | போதைப் பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1. | கஞ்சா | 22,969 கி.கி. |
| 2. | கஞ்சா சாக்லேட் | 246 கி.கி. |
| 3. | இபுபுரூஃபன் | 101 கி.கி. |
| 4. | எப்பிட்ரின் | 18 கி.கி. |
| 5. | மெத்தாம்பெட்டமைன் | 7 கி.கி. |
| 6. | ஹெராயின் | 953 கிராம் |
| 7. | ஆம்பெட்டமைன் | 250 கிராம் |
| 8. | கோகேயின் | 60 கிராம் |
| 9. | எம்டிஎம்ஏ மாத்திரைகள் | 9 கிராம் |
| 10. | இதர போதைப் பொருட்கள் | 240 கி.கி. |
| 11. | மயக்கமூட்டும் மாத்திரைகள் | 56,460 எண்கள் |

இந்த நடவடிக்கையில், 4 வெளிநாட்டினர் உட்பட 14,447 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- 15,642 தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் தொடர்பான வழக்குகள் கண்டறியப்பட்டு, 1,47,130 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.
- மாநிலங்களுக்கு இடையேயான போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த மூன்று ஆண்டுகளில், 2,486 பிற மாநிலக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் கஞ்சா விற்பனை செய்வதைத் தீவிரமாக தடுக்கும் பொருட்டு, கல்வி நிறுவனங்களின் அருகில் உள்ள கடைகளில் சிறப்புச் சோதனைகள் நடத்தப்பட்டன. மாநிலம் முழுவதும் கல்வி நிறுவனங்களில் 79,893 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 30,08,591 பேர் கலந்து கொண்டனர்.

- 2022 ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான அளவில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் குற்றவாளிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் நிதி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ரூ.19.31 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.
- NDPS சட்டம் தொடர்பான சட்ட வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் / நண்பர்களுக்கு சொந்தமான 1,663 வங்கிக் கணக்குகள் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 102–இன் கீழ் முடக்கப்பட்டது.
- தடுப்புக் காவல் சட்டம் 14 / 1982–இன்படி 557 முக்கிய போதைப் பொருள் குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

- பிணையில் வெளிவரும் போதைப் பொருள் குற்றவாளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த, அவர்கள் நன்னடத்தை நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு அமைதியை நிலைநாட்டுவதற்கான பிணை பெறப்பட்டு, நிபந்தனைகளை மீறும் போதெல்லாம் பிணை நீக்கப்பட்டு கைதாகிறார்கள். ஓராண்டில் மட்டும் 3,441 குற்றவாளிகள் பிணை ஒப்பந்தத்தில் பிணைக்கப்பட்டுள்ளனர் மற்றும் 41 குற்றவாளிகள் பிணை நீக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.
- கஞ்சா மற்றும் பிற போதைப் பொருட்கள் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட 1,403 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், போதைப் பொருள் ஒழிப்புக் குழுக்கள் மூலம் இந்த வாகனங்களை ஏலத்தில் விட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.3 விழிப்புணர்வு நடவடிக்கைகள்

1. போதைக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை நடத்துவதற்கு அரசு ரூ.1.00 கோடி அனுமதித்தது. 2023–24 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

    i. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள போதைப் பொருள் எதிர்ப்புக் குழு நிர்வாகிகளுக்கு 47,000 "எனக்கு வேண்டாம்" வில்லைகள் (Badges) விநியோகிக்கப்பட்டுள்ளன.

    ii. போதைப் பொருள் உபயோகத்திற்கு எதிராக சமூக ஊடகங்களான முகநூல் / X தளம் / இன்ஸ்டாகிராம் / யூ டியூப் ஆகியவற்றில் செய்திகள், வீடியோக்கள், ரீல்கள் போன்றவற்றை பதிவேற்றம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

    iii. சமூக வலைதளங்கள் மூலம் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "லைப் இருக்கு

டிரக் எதுக்கு" என்ற பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

2. பொதுமக்களுக்கு போதைப் பொருள் உபயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 1,600 மாணவர்களால் அதிகளவு சிலம்பாட்ட இயக்கங்களை (9,60,000 இயக்கங்கள் குறைந்த கால அளவில்) நிகழ்த்தப்பட்ட சாதனை நிகழ்ச்சியினை அமலாக்கப் பிரிவு ஏற்பாடு செய்தது. இந்த முயற்சி உலக சாதனை அமைப்பால் "உலக சாதனையாக" அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3. உலக போதைப் பொருள் எதிர்ப்பு தினமான ஜூன் 26 அன்று, மாநிலம் முழுவதும் 6,000 சாலை சந்திப்புகளில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முயற்சி உலக சாதனை அமைப்பினால் "உலக சாதனையாக" அங்கீகரிக்கப்பட்டது.

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11.08.2023 அன்று நடைபெற்ற மாநில அளவிலான நிகழ்ச்சியில், மாநிலம் முழுவதும் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் போதைப் பொருட்களுக்கு எதிரான உறுதிமொழி ஏற்றனர். இந்த முயற்சி உலக சாதனை அமைப்பினால் "உலக சாதனையாக" அங்கீகரிக்கப்பட்டது.

5. மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி மற்றும் போதைப் பொருளின் தீமைகளை உள்ளடக்கிய 20 நிமிட விழிப்புணர்வு காணொளி தயாரிக்கப்பட்டு அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சமூக வலைதளங்களிலும் பகிரப்பட்டது.

6. போதைப் பொருட்கள் ஒழிப்பு இயக்கத்தின் (Drive Against Drugs – DAD) ஒரு பகுதியாக, போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருட்களுக்கு எதிரான ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கும் 18,000 கல்வி நிறுவனங்களில் போதைப் பொருள் எதிர்ப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**புதிய முன்னெடுப்புக்கள்**

4.4 "போதையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடைய போதைப் பொருள் ஒழிப்பு இயக்கத்தில் (DAD) பங்கேற்கும் காவல் துறையினர் மற்றும் இரகசிய தகவலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், 2023–24 ஆம் ஆண்டில் ரூ.50.00 லட்சத்தை சுழல் நிதியாக அரசு அனுமதித்துள்ளது. NDPS சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் காவல்துறை அதிகாரிகளுக்கு ரூ.1.00 லட்சம் வரையும் மற்றும்

தகவல் அளிப்பவர்களுக்கு ரூ.2.00 லட்சம் வரையும் வெகுமதிகளை வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறையின் உருவாக்கம்**

**4.5** மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவை இணைத்து "அமலாக்கப் பணியக குற்றப் புலனாய்வுத் துறை" (EB–CID) உருவாக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**4.6** புதியதாக உருவாக்கப்பட்ட அமலாக்கப் பணியகக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம், சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைச் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்தும் பொறுப்பு உள்ளது.

**4.7** மாவட்டங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட அமலாக்கப் பணியக குற்றப் புலனாய்வுத் துறை

அலகுகள், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலுள்ள அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களைக் கொண்டு தற்போதுள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளை விரிவுபடுத்த உதவும்.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**5.1** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநில பொதுத்துறை நிறுவனமாக 23.05.1983 அன்று நிறுவனங்கள் சட்டம், 1956–இன்கீழ் (Companies Act, 1956) நிறுவப்பட்டது.

**தனிச் சிறப்புரிமை**

**5.2** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X / 1937), பிரிவு 17–C (1–A) (a)–இன்படி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனிச் சிறப்புரிமை, தமிழ்நாடு மாநில வாணிபக்

கழகத்திற்கு வழங்கப்பட்டு, 23.05.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் X / 1937), பிரிவு 17–C (1–B) (a)–இன்படி இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனிச் சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. இவற்றுடன் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் சந்தைப்படுத்தி வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

**5.3** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் திறம்பட செயல்படுவதற்கு இயக்குநர் குழுமம் முன்னின்று வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றது. அரசு முதன்மைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள்

இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, அரசு முதன்மைச் செயலாளர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**பங்கு மூலதனம்**

**5.4** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ.15.00 கோடி முழுவதும் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் அமைப்பு**

**5.5** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அன்றாடப் பணிகள் மற்றும் செயல்பாடுகளை அதன் மேலாண்மை இயக்குநர் பொறுப்பேற்று செயல்படுத்தி வருகிறார். அவருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த

விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), பொது மேலாளர் (நிதி), தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), துணை பொது மேலாளர் (கொள்முதல் மற்றும் விற்பனை), நிறுவனச் செயலர், முதன்மை கணக்கு அலுவலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**பதிவு அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள்**

**5.6** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய ஐந்து இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களை மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் நிர்வகிக்கின்றனர்.

**சிறப்பு பறக்கும் படைகள்**

**5.7** துணை ஆட்சியர் நிலையில் சிறப்பு பறக்கும் படைகள், சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மண்டல அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ளன. மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த மதுக்கூடங்கள் முறையாக செயல்படுவதை ஆய்வு செய்வதும், தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்படும் புகார்களை சரிபார்ப்பதும் இவ்வலுவலர்களின் முதன்மைப் பொறுப்பு ஆகும்.

**மாவட்ட அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்**

**5.8** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கீழ் 38 மாவட்ட அலுவலகங்களும்; 43 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும்; 4,829 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும்; இக்கடைகளுடன் இணைந்த 2,919 மதுக்கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 31.03.2024 அன்றுள்ளவாறு

மாநிலத்தில் உள்ள FL2 உரிமம் பெற்ற 546 மனமகிழ் மன்றங்களுக்கும், FL3 உரிமம் பெற்ற 854 தங்கும் இடத்துடன் கூடிய மதுபானக் கூடங்களுக்கும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மதுபானங்களை வழங்கி வருகிறது.

**5.9** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 43 மதுபானக் கிடங்குகளில் மதுபானங்கள் இருப்பு வைக்கப்படுகிறது. இவற்றில் 32 மதுபானக் கிடங்குகள் சொந்தக் கட்டடங்களிலும் மற்றும் மீதமுள்ள 11 மதுபானக் கிடங்குகள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

**மதுபான வகைகள் கொள்முதல்**

**5.10** மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 8 பீர் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் ஒரு ஒயின் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இந்நிறுவனத்தில், 236 வகையான தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபானங்கள் மற்றும் வெளி மாநில மதுபானங்கள் கிடைக்கப்பெறும். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபானங்களில், 179 மதுபான வகைகளும், 40 பீர் வகைகளும் மற்றும் 3 ஒயின் வகைகளும் அடங்கும். வெளி மாநில மது வகைகளில், 6 மதுபான வகைகளும், 8 ஒயின் வகைகளும் அடங்கும்.

**இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்தல்**

**5.11** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் 500 வகையான மதுபான வகைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில், 264 மதுபான வகைகள், 26 பீர் வகைகள் மற்றும் 210 ஒயின் வகைகள் அடங்கும். இம்மதுபானங்கள் FL.11 உரிமம் பெற்ற, வணிக வளாகங்களில்

அமைந்துள்ள, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 238 (வணிக வளாகம் / உயர்ரக மதுபான கடைகள்) மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்கள்**

**5.12** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மார்ச் 31, 2024 அன்றைய தேதியில் 4,829 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த / தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | பணியாளர் பிரிவு | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேற்பார்வையாளர்கள் | 6,581 |
| 2 | விற்பனையாளர்கள் | 14,775 |
| 3 | உதவி விற்பனையாளர்கள் | 2,630 |
| | **மொத்த எண்ணிக்கை** | **23,986** |

**மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர் நலத்திட்டங்கள்**

**5.13** மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியம் மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் அரசின் உத்தரவிற்கேற்ப ஊக்கத் தொகை (Bonus) மற்றும் கருணைத் தொகை (Ex–gratia) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பணியாளர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் வைப்பு நிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட கூடுதல் ஊக்கத் தொகை ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணியாளர்களின் நலனுக்காக மருத்துவ உதவி திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.14** களப்பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப

2023–24 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:–

1. 1038 கடைகளுக்கான மாதாந்திர வாடகை உயர்த்திட ரூ.13.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
2. மதுபானக் கடைகளில் ஏற்படும் சில்லறை செலவினங்களுக்கான முன்பணம் ரூ.750/– என அனைத்து கடைகளுக்கும் உயர்த்தி வழங்கிட ரூ.4.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
3. 824 கடைகளுக்கு தனி மின் மீட்டர் பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
4. மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் மதுபானங்களைக் கையாளும் போது உடையும் பாட்டில்களுக்கு இழப்புத் தொகை வழங்கும் பொருட்டு ரூ.5.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. இடமாற்றம் செய்யப்படும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் குறைந்தபட்ச பரப்பளவு 500 சதுரடியுடனும் தேவையான அடிப்படை வசதிகளுடனும் அமைக்கப்படும்.

**கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்**

**5.15** திருட்டு மற்றும் தாக்குதலுக்கு ஆளாகக் கூடிய பகுதிகளில் செயல்படும் 3000 கடைகளில் கண்காணிப்பு கேமராக்கள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கண்காணிப்பு கேமராக்கள் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டுக்களையும் / திருட்டு முயற்சிகளையும் தடுப்பதற்கும் அதனைக் குறைப்பதற்கும் அரணாக உள்ளன. மேலும், கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய நபர்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. இந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து, மதுபானக்

கடைகளில் அடையாளம் தெரியாத நபர்களைக் கண்காணிக்கவும் மற்றும் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் வழிவகை செய்கின்றன.

**5.16** அரசின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் இரவு பார்வை கொண்ட இரண்டு கண்காணிப்பு கேமராக்கள் வீதம் பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023-24 ஆம் ஆண்டில் ரூ.16.00 கோடி செலவில் 1,000 கண்காணிப்பு கேமராக்கள் கொள்முதல் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**பணப் பாதுகாப்பு பெட்டகம் நிறுவுதல்**

**5.17** திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள கிராமங்கள் மற்றும் நகர பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்பட்டு வரும் 2,825 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில்,

300 கிலோவிற்கும் மேல் எடை கொண்ட வலுவான சேதப்படுத்த இயலாத பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. கடைப் பணியாளர்கள் கடையின் விற்பனை நேரம் முடிந்த பிறகு விற்பனைத் தொகையினை இந்த பணப் பாதுகாப்பு பெட்டகங்களில் வைத்துக் கொள்ள போதுமான பாதுகாப்பு உள்ளது.

**5.18** பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மதுபானக் கடைகளில் 970 பணப் பாதுகாப்புப் பெட்டகங்களை நிறுவிட அரசு ஆணையிட்டுள்ளது. அதற்கிணங்க தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 970 பணப் பாதுகாப்புப் பெட்டகங்களை வாங்குவதற்கு ஆணைகள் வழங்கி, அவற்றில் இதுவரை 715 பணப் பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**ஆய்வு செயலி**

**5.19** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை ஆய்வு செய்யும் பொருட்டு, 'ஆய்வு செயலி' தமிழ்நாடு மின்னாளுமை முகமை

(TNeGA) மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய செயலியில், அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் அமைவிடம் GIS தொழில்நுட்பம் மூலம் Geotag செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து முக்கிய விவரங்களை உள்ளடக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயலியில், ஆய்வின் போது, கடைப் பணியாளர்களின் வருகை, சரக்கு இருப்பு, 90 நாட்களுக்கு மேற்பட்ட சரக்கு இருப்பு விவரங்கள், விலைப் பட்டியல் அறிவிப்புப் பலகை, கண்காணிப்பு கேமரா இயக்கம் மற்றும் கடைகளில் பராமரிக்கப்படும் பல்வேறு பதிவேடுகள் குறித்த ஆய்வுக் குறிப்புகள் பதிவு செய்யப்படும். அனைத்து முதுநிலை மண்டல மேலாளர்கள், சிறப்பு பறக்கும் படை துணை ஆட்சியர்கள், மாவட்ட மேலாளர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் (கலால்) ஆகியோருக்கு இச்செயலியின் சிறப்பம்சங்கள் குறித்தும், ஆய்வின் போது, செயலியில் தகவல்களை எவ்வாறு பதிவேற்றம்

செய்வது என்பது குறித்தும், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இச்செயலி ஒரு மாத காலத்திற்கு சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்குதல் (End to End Computerisation)**

**5.20** அரசின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்கும் ஒரு புதுமைத் திட்டத்தினை செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.21** இத்திட்டத்தினை திருவாளர்கள் Railtel Corporation of India Limited என்ற நிறுவனம் வடிவமைத்து வருகிறது. இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்போது உற்பத்தி நிறுவனங்களில் மதுபானங்கள் உற்பத்தி செய்யப்படுவது முதல் சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பனை செய்வது வரையிலான அனைத்து செயல்பாடுகளையும்,

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையரகம் கண்காணிக்க இயலும். மேலும், அனைத்து செயல்பாடுகளிலும் தொழில்நுட்பத்தின் மூலமாக தீர்வுகள் மேற்கொள்வதால் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மதுபானப் புட்டியையும் தயாரித்தல், அட்டைப் பெட்டிகளில் அடைத்து கிடங்குகளுக்கு அனுப்புதல், பின்னர் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்து விற்பனை செய்யப்படும் வரை கண்காணிப்பதற்கான ஒரு தீர்வாக அமைய உள்ளது (Track and Trace System). இதன் மூலம் தலைமை அலுவலகத்திலிருந்து சரக்கு இருப்பு மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் உடனுக்குடன் பெற முடியும்.

**காலி மதுபானப் புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம்**

**5.22** சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் பொருட்டும், மதுபான கண்ணாடி புட்டிகளை பொதுவெளியில் கவனக்குறைவுடன் தூக்கி எறிவதால்

ஏற்படும் தீங்கினைத் தடுக்கும் பொருட்டும், காலி மதுபானப் புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம், மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, வாடிக்கையாளர்கள் மதுபானப் புட்டிகளை வாங்கும்போது நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச விலையை விட கூடுதலாக ரூ.10/–ஐ செலுத்தி, பின்னர் காலி மதுபானப் புட்டிகளை கடைகளில் கொடுக்கும்போது ரூ.10/–ஐ திரும்ப பெற்றுக் கொள்ளும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது முதலில் நீலகிரி மாவட்டத்தில் 15.05.2022 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து 15.06.2022 முதல் கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), தர்மபுரி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், பெரம்பலூர், தேனி மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கும் மற்றும் இதர மலைப் பிரதேசங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**கடைகளில் மின்னணு கருவிகள் நிறுவுதல்**

**5.23** நுகர்வோர்கள், மின்னணு தொழில்நுட்பம் வாயிலாக விற்பனைத் தொகையை செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு கருவிகள் (Point of Sale Machines) நிறுவப்பட்டுள்ளன.

**இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணைய உரிமம்**

**5.24** இந்நிறுவனத்தின் அனைத்து மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் 2006 ஆம் ஆண்டின் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் ஆண்டுதோறும் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**மது விற்பனை தடை செய்யப்பட்ட நாட்கள்**

**5.25** அரசின் ஆணைக்கிணங்க, மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் கீழ்க்கண்ட 8 தினங்கள் மது விற்பனை தடை செய்யப்பட்ட நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன:

1. திருவள்ளுவர் தினம்
2. குடியரசு தினம்
3. வடலூர் இராமலிங்கர் நினைவு நாள்
4. மகாவீர் ஜெயந்தி தினம்
5. மே தினம்
6. சுதந்திர தினம்
7. நபிகள் நாயகம் பிறந்த நாள்
8. காந்தி ஜெயந்தி தினம்

இவை தவிர, மாவட்ட ஆட்சியரால் உள்ளூர் முக்கிய நிகழ்வுகள் என அறிவிக்கப்படும் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் நாள், வாக்கு எண்ணிக்கை நாள் ஆகிய நாட்களும் மது விற்பனை தடை செய்யப்பட்ட நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

**5.26** அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 2003-04 | 1,657.10 | 1,982.83 | 3,639.93 |
| 2 | 2004-05 | 2,549.00 | 2,323.03 | 4,872.03 |
| 3 | 2005-06 | 3,176.65 | 2,854.12 | 6,030.77 |
| 4 | 2006-07 | 3,986.41 | 3,487.20 | 7,473.61 |
| 5 | 2007-08 | 4,764.05 | 4,057.11 | 8,821.16 |
| 6 | 2008-09 | 5,755.42 | 4,846.08 | 10,601.50 |
| 7 | 2009-10 | 6,740.59 | 5,757.63 | 12,498.22 |
| 8 | 2010-11 | 8,115.90 | 6,849.52 | 14,965.42 |
| 9 | 2011-12 | 9,956.06 | 8,125.10 | 18,081.16 |
| 10 | 2012-13 | 12,125.31 | 9,555.36 | 21,680.67 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 2013-14 | 5,034.82 | 16,640.07 | 21,674.89 |
| 12 | 2014-15 | 5,731.18 | 18,433.77 | 24,164.95 |
| 13 | 2015-16 | 5,836.01 | 20,009.57 | 25,845.58 |
| 14 | 2016-17 | 6,248.17 | 20,747.08 | 26,995.25 |
| 15 | 2017-18 | 6,009.25 | 20,788.71 | 26,797.96 |
| 16 | 2018-19 | 6,863.11 | 24,294.72 | 31,157.83 |
| 17 | 2019-20 | 7,205.97 | 25,927.27 | 33,133.24 |
| 18 | 2020-21 | 7,821.69 | 25,989.46 | 33,811.15 |
| 19 | 2021-22 | 8,236.60 | 27,814.05 | 36,050.65 |
| 20 | 2022-23 | 10,422.47 | 33,698.66 | 44,121.13 |
| 21 | 2023-24* | 10,774.28 | 35,081.39 | 45,855.67 |

***ஒத்திசைவுக்கு உட்பட்டது.**

## நிறைவுரை

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், போலி மதுபான விற்பனை மற்றும் சட்ட விரோதமாக மதுபானங்களை எடுத்துச் செல்லுதல், போதை மருந்துகள் மற்றும்

மனமயக்கப் பொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது. FL / DL உரிமங்களை தீவிர ஆய்வுக்கு உட்படுத்தியது, சோதனைகளை அதிகப்படுத்தியது, சட்ட விரோத செயல்களில் ஈடுபட்ட வாகனங்கள் அமலாக்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டது, வங்கிக் கணக்கு மற்றும் சொத்துக்களை முடக்கியது மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் தொடர் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளினால் பயன் கிடைக்கத் துவங்கியுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கியும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயல்பாடுகளின் மூலமும், மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்கான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படும்.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுத்து மறுவாழ்வு அளிக்கும் வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையுடன் இணைந்து இவ்வாண்டில் அரசு மருத்துவமனைகளில் 25 போதை மீட்பு மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது.

காவல் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை போன்ற துறைகளுடன் இணைந்து, தமிழ்நாட்டை போதைப் பொருள் இல்லாத மாநிலமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சு. முத்துசாமி**
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.